முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 267

திங்கட்கிழமை
19 ஓகஸ்ட் 2024

ஆவணி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# தமிழரசுக்கட்சி இன்னமும் முடிவில்லை

## தொடர்ந்தும் பேச்சு நடத்த மத்திய குழு முடிவு

வவுனியா, ஓகஸ்ட் 19

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் தொடர்ந்து பேச்சு முன்னெடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

☞ 11



### உணவு, பாடசாலைப் பொருட்கள் சுகாதார சேவை என்பவற்றுக்கு

# 'வற்' நீக்கப்படும்!

## அநுர உறுதியளிப்பு

கொழும்பு, ஓக. 19

நாம் ஆட்சிக்கு வந்தால் உணவு, சுகாதார சேவைகள் மற்றும் பாடசாலைப் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரி (வற்) நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார

☞ 11

# சந்நிதியில் 35 பவுண் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் நேற்று மாத்திரம் 35 பவுண்

☞ 11

# பக்த வெள்ளத்தில் தேரேறிய சந்நிதியான்



யாழ்ப்பாணம், ஓக. 19

'அன்னதானக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று

☞ 11

# இ.தொ.காங்கிரஸ் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

☞ 11

# உலகின் தலைமைத்துவம் மேற்கிடமிருந்து தெற்குக்கு

## இந்தியாவைப் பாராட்டுகின்றார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஓக. 19

உலகளாவிய தலைமைத்துவத்தில் மேற்கு இனிமேலும் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது. இவ்வாறான நிலையில், உலகின் தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளை

☞ 11

# அலங்காரக் கந்தன் நேற்று மஞ்சத்தில்!



யாழ்ப்பாணம், ஓக. 19

அலங்காரக் கந்தனாக நல்லூர்ப் பதிதனிலே வீற்றிருக்கும் நல்லூர்க் கந்தனின் மஞ்சத் திருவிழா நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது.

வசந்தமண்டப பூசையைத் தொடந்து உள்வீதி வலம் வந்து மாலை 5 மணியளவில் மஞ்சத்திலேறிய நல்லூர் கந்தப்பெருமான் வெளிவீதி உலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார்.

☞ 11

### நூறு அடி ஆழத்தில் அட்டை பிடித்தபோது

# திடீர் நெஞ்சுவலியால் மீனவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 19

வடமராட்சிக் கடற்பரப்பில் நூறு அடி ஆழத்தில் அட்டை தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளி ஒருவர் திடீர் நெஞ்சுவலி காரணமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கற்பிட்டியைச் சேர்ந்த சேவுதாதின் முகமதுதாவீன் (வயது-40) என்பவராவார்.

☞ 11

# குரங்கம்மை நோய்க்கு சிகிச்சையளிக்கத் தயார்

## சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

குரங்கம்மை நோய்க்கு சிகிச்சையளிக்கத் தயாராக இருப்பதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை குரங்கம்மை தொற்றாளர்கள் எவரும் இனம் காணப்படவில்லையெனவும்

☞ 11

# தாய்ப்பால் புரையேறி மூன்றரைமாத சிசு சாவு

கொடிகாமம், ஓக. 19

தாய்ப்பால் புரையேறியதால் மூன்றரை மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் மிருசுவில் வடக்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது. கபிலன் நிவேதா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

☞ 11

# யுவதி வன்புணர்வு 3 பேருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 19

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மனவளர்ச்சி குன்றிய யுவதி ஒருவரை வன்புணர்ந்து கர்ப்பமாக்கியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பொ.குமாரசாமி உத்தரவிட்டார்.

☞ 11

# முச்சக்கரவண்டி மோதி முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வாங்குவதற்குச் சென்ற முதியவர் முச்சக்கரவண்டி மோதியதில் உயிரிழந்துள்ளார்.

ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த சின்னையா இரத்தினசிங்கம் (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகார முறைமை சஜித் ஆட்சியில் ஒழிக்கப்படும்

## அஜித் பெரேரா தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 19**

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சியின்கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, தேர்தல்முறை மாற்றம், நீதித்துறையை வலுப்படுத்தல், மக்களின் அடிப்படை உரிமைகள், கலாசார உரிமைகள், பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு அமையும்.**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின்நிறைவேற்றுப்பணிப்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி பரப்புரை செய்தது. ஆனால், இம்முறை அதுபற்றி பேசப்படுவதில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுமாறிவிட்டதாஎனஎழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

பல திருத்தங்களால் மாற்றியமைக்கப்பட்டுள்ள தற்போதைய அரசமைப்புக்குப் பதிலாக புதிய தொரு அரசமைப்பை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதேஎமது நோக்கமாகும். புதிய அரசமைப்பை இயற்றும் பணியை மூன்று மாதகாலப் பகுதிக்குள் ஆரம்பித்து, சட்டவரைவு தயாரிக்கும் பணியை கூடிய விரைவில் முடிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில்சர்வகட்சி குழுவொன்று அமைக்கப்பட்டு, இதற்குரிய பணி இடம் பெறும்- என்றார். (ச-44)

# ஜனாதிபதித் தேர்தலில் இரு பக்கங்களில் இரு சகோதரர்கள்

கொழும்பு, ஓக. 19

குடும்ப அரசியல் பின்னணி கொண்ட சில சகோதரர்கள் ஜனாதிபதித் தேர்தலில் இரு அணிகளாகப் பிரிந்து வெவ்வேறு நபர்களுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

ரணதுங்க குடும்பத்தைச் சேர்ந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தும், அவரது சகோதரர் அர்ஜுன ரணதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தும் பரப்புரைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

காமினி திஸாநாயக்க குடும்பத்தைச் சேர்ந்த நவீன் திஸாநாயக்க ரணில் விக்கிரமசிங்க பக்கம் நிற்கின்றார். அவரது தம்பியான மயந்த திஸாநாயக்க சஜித்துடன் இணைந்து பயணிக்கின்றார். (ச-44)

# மைத்திரியின் தூது; ரணிலால் நிராகரிப்பு

கொழும்பு, ஓக.19

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தூது அனுப்பியதாகவும் ஆனால், அந்தக் கோரிக்கையை ரணில் நிராகரித்துள்ளதாகவும் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்தக் கோரிக்கையை நிராகரித்த ரணில், நம்ப முடியாத ஒருவரின் ஆதரவு தமக்கு வேண்டாமெனத் தெரிவித்தார்.

ஒரு முன்னாள் ஜனாதிபதி, இவ்வளவு கீழ்த்தரமான நிலைக்குச் சென்றதை நினைத்து நாங்கள் வருந்துகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மகனின் வெற்றிக்கு மேடையேறும் மஹிந்த



கொழும்பு, ஓக. 19

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்காக பிரதான பரப்புரை மேடைகளில் ஏறுவதற்கு கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ச தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

தனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டு மொட்டுக் கட்சியின் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்பதில்லை எனவும், ஓரிரு கூட்டங்களில் மாத்திரம் கலந்துகொள்வதெனவும் மஹிந்த ராஜபக்ச முன்னதாக முடிவெடுத்திருந்தார்.

எனினும், மொட்டுக்கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ச கடைசி நேரத்தில் களமிறக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து தனது மகனின் வெற்றிக்காக கூட்டங்களில் பங்கேற்கும் முடிவை மஹிந்த எடுத்துள்ளார் என அறியமுடிகின்றது.

எனினும், ஓரிரு கூட்டங்களில் மட்டுமே மஹிந்த உரையாற்றக்கூடும் எனவும், ஏனைய கூட்டங்களில் நாமலுக்கு ஆதரவு திரட்டி அமர்ந்திருப்பார் என்றும் தெரியவருகின்றது. (ச-44)

# மஹிந்த சொன்னால் வாக்குகள் நாமலுக்கே

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது இரத்தமான நாமல் ராஜபக்சவுக்கு வாக்களிக்குமாறு மஹிந்த கூறினால் மக்கள் வாக்கை அள்ளிவழங்குவார்கள்.

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நாமல் ராஜபக்ச தெரிவு செய்யப்படுவார்.

மஹிந்த ராஜபக்ச முகாமில் ஒற்றை நாட்டை உருவாக்கக்கூடிய பொருத்தமான வேட்பாளர் நாமல் ராஜபக்ச. அமைச்சர்கள் கட்சியை விட்டு வெளியேறினாலும் கட்சிக்காரர்கள் விலகவில்லை.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தோல்வியடைவார் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# பெண் வகிபங்கின்மை துடுப்பு இல்லாத படகே

## *கீதா குமாரசிங்க சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக.19

ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் பெண்களின் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமை மிகவும் வருத்தமளிக்கும் விடயம் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்கூட பெண்களுக்கு உரிய இடமும் சமமான இடமும் வழங்கப்படவேண்டும் என கட்சித் தலைவர்கள்பெருமையுடன் கூறினாலும் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகிறது.

ஒருநாட்டில் பெண் உரிமைகள் தொடர்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் அதிக அக்கறை காட்டவேண்டும்.

இம்முறை பெண் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் துடுப்பில்லாத படகு போன்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# மைத்திரி ஆதரவு தேவையில்லை

## *விஜயதாஸ தெரிவிப்பு*



கொழும்பு, ஓக. 19

எனக்கு ஆதரவளித்துவந்த மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்ளப்போவதாக கேள்விப்பட்டேன். அவர் அவ்வாறு சென்றால் மிகவும் நல்லது என நினைக்கிறேன்.

-இவ்வாறு தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், அவர் ஊடகங்களுக்கு இதனைக் குறிப்பிட்டார். (ச-இ)



# ஐரோப்பிய ஒன்றியக் குழு; தேர்தல் கண்காணிப்பு வருகை

கொழும்பு, ஓக.19

இலங்கைத் தேர்தல் ஆணையகத்தின் அழைப்பைத் தொடர்ந்து, செப்ரெம்பர் 21ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்குத் தேர்தல் கண்காணிப்புப் பணிக்குழுவை அனுப்ப ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இலங்கை விடயத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் அர்ப்பணிப்பு மற்றும் பங்காளித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில், 6 சந்தர்ப்பங்களில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்பியது.

இந்தநிலையில், வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான யூனியனின் உயர் பிரதிநிதியும், ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவருமான ஜோசப் பொரெல், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோர் என்பவரை இலங்கை தேர்தலுக்கான தலைமைப் பார்வையாளராக நியமித்துள்ளனர்.

அவர்கள் தலைமையிலான குழு விரைவில் இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந் திருவிழாவின் 9ஆவது நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு நல்லைக் கந்தப்பெருமான் யானை வாகனத்தில் பக்தர்கள் புடைசூழ வெளி வீதி உலா வந்த அருட்காட்சி. (எ-100)




## 519 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.19

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரை 519 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்தமாதம் 31 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிடைத்த முறைப்பாடுகளில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 503 முறைப்பாடுகள் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் செயல்கள் தொடர்பாக ஒரு முறைப்பாடும், ஏனையவை தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பதாகைகளை அகற்ற விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக.19

தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் கட்அவுட் சுவரொட்டிகளை அகற்றுவதற்காக சுமார் ஆயிரத்து 500 பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின்படி, பதாகைகள் மற்றும் கட்அவுட் சுவரொட்டிகளை அகற்றும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பதாகைகள் மற்றும் கட்அவுட் சுவரொட்டிகளை அகற்றும் ஒரு தொழிலாளிக்கு அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர்கள் நாளொன்றுக்கு ஆயிரத்து 300 ரூபா கொடுப்பனவு வழங்குவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.19

வடமாகாணத்தில் வாழும் முதியோர்களின் பிரச்சினைகள் பற்றிய கருத்தரங்கு யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

கருத்தரங்கில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டு நிர்வாக சபைக் குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளது என இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடமாகாண அமையத் தலைவர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (எ-ரி)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.19

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-45)




### அபயம் அளித்திடுவாய்

கந்த வடிவேலவனே
பெருங் கருணைப் பேரோனே
அகந்தை அழிந்திடவும் அகங்காரம் நீங்கிடவும்
சிந்தை தனில் நின்றாடும் சிங்கார வடிவேலா
எந்தை முருகனே ஏறுமயில் வாகனனே இம்
மண்ணில் மாந்தர் நல்ல
வண்ணம் வாழ்ந்திடவே
மஞ்சுதனே மாந்தர் நல்ல
வண்ணம் வாழ்ந்திடவே
அஞ்சேல் என நின் அபயக்கரம்
காட்டி அபயம் அளித்திடுவாய்
உனை வந்தனை செய்தே
நின் பொற்பாதம் தொழுகின்றோம்.

■ சி.மகாலட்சுமி

### சுடர் வேல் சுடும்

அத்தனை அட்டூழியங்களும்
நாட்டில் மலிந்து விட்டனவே!
ஆன்மீகம் பூக்கவில்லை முருகா!
அத்தனை பேரும் ஆசையிலே பூத்தவர்களே!
புத்தம் புதிய கார் புத்தம் புதிய வீடுகள்
பூமியில் பெரும்பங்கு இவர்களுக்கு
பூவுடல் பிரிந்தால் அடிபிடி சண்டையே!
புதிதாகத் தலைமைகளுக்கு இடம் இல்லை
இத்தனை தெரிந்தும் எல்லாமே நான் என்ற
இறுமாப்பு இன்னும் குறையவில்லை,

இந்தியா சொன்னால் நீதி கிடைக்கும் என்று
இறைவனுக்கும் ஒரு வெருட்டு,
சுத்தமான பிழையைசுருதியோடு பாடினால்
சூரியனும் நம்புவானோ,
சொத்துப்பத்து கூடக்கூட சோதனை வந்தே தீரும்
சும்மா உன்னை விடாது பார் சுடர்வேல் சுடும்.

■ கே.எஸ். சிவஞானராஜா

## நல்லூர்த் திருவிழாவின் 11ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.19

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

11ஆம் நாள் நிகழ்வு, நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் முன்னிலைவகிக்க, அவுஸ்ரேலியா மெல்பேண் மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் ஜெயராமசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் அறநெறிப் பாடசாலை, புங்குடுதீவு மடத்து வெளி முருகன் அறநெறிப் பாடசாலை, புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக அனுராகம் கவின்கலை நிலையம் வழங்கும் வீணைவாத்தியம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குப் பெறவே 13ஆவது திருத்தம்

## சாடுகின்றார் பொன்சேகா



**கொழும்பு, ஓக.19**

**வாக்குகளைப் பெறுவதற்காக அனைவரும் 13ஆவது திருத்தத்தை உச்சரிக்கின்றனர் என ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூகங்களின் மத்தியில் பகைமை உணர்வை உருவாக்கக்கூடாது. இந்த விடயத்தில் நாங்கள் எதைச் செய்தாலும் நாட்டின் அனைத்து மக்களினதும் ஆதரவு அதற்கு அவசியம்.

இந்தப் பரிந்துரைகளை வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தும்போது தென்பகுதி மக்கள் குழப்பமடைந்தால், அதை உரிய தீர்வாக கருதமுடியாது. இவை மிகவும் உணர்வுபூர்வமான விடயங்கள்.

பொருளாதாரம் தொடர்பில் நாங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றபோதும், வாக்குகளைப் பெறுவதற்காக மாத்திரம் அரசியல்வாதிகள் இனப்பிரச்சினை போன்றவற்றைப் பேசுகின்றனர்- என்றார். (எ-இ)

# ஐ.ம.ச. தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினை தீர்வுத் திட்டம்

கொழும்பு, ஓக.19

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமது கட்சியின் அரசியல் பொறிமுறை என்ன என்பது தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் 22 ஆம் திகதி சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி வெளியிடவுள்ளது எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்படவுள்ளது.

தமது ஆட்சியின்கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், பொருளாதார மீட்சித் திட்டங்கள், வெளிவிவகாரக் கொள்கை என்பன உள்ளிட்ட விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பட்டியிலிடப்படவுள்ளன.

அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிய உறுதிமொழியும் வழங்கப்படவுள்ளது.

மலையக தமிழ் மக்களுக்கான அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்களும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (எ-44)

# தே.ம.சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு!

கொழும்பு, ஓக.19

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வெளியிடவுள்ளது. அரசியல் மறுசீரமைப்பு, பொருளாதார மறுசீரமைப்பு என 40 பிரதான விடயங்களை உள்ளடக்கிய வகையில் விஞ்ஞாபனம் அமையவுள்ளது. அதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் பொறிமுறை உருவாக்கப்படும் எனவும், அனைவருக்கும் சம உரிமை, ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கிய வகையில் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உத்தரவாதமும் வழங்கப்படவுள்ளது. (எ-44)

# வெளிநாட்டில் அநுரவுக்காக பரப்புரை

கொழும்பு, ஓக.19

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவை வெற்றி பெறச் செய்வதற்காக வெளிநாடுகளில் வசிக்கும் செயற்பாட்டாளர்கள் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், அறிவுறுத்தல்களை வழங்குதல், இலங்கையில் உள்ள உறவினர், நண்பர்களை அறியப்படுத்துதல் போன்றவேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# நாமலின் தேர்தல் அறிக்கை செப்ரெம்பர் முதல்வாரம்!

கொழும்பு, ஓக.19

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் தேர்தல் விஞ்ஞாபனம் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

அதேவேளை, நாமல் ராஜபக்சவின் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பமாகவுள்ளது. (எ-44)

# தேர்தல் பரப்புரைகளை கண்காணிக்கத் தளம்!

கொழும்பு, ஓக.19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பரப்புரைச் செலவுகளைக் கண்காணிப்பதற்காக இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தளத்துக்கு 'வோட் மணி மீற்றர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் மற்றும் பவ்ரல் அமைப்பு உள்ளிட்ட ஆறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# புதினம் தெரியுமோ?

**நுணல் மட்டுமில்லை டாக்குத்தர் அர்ச்சுனாவும் தன்ர வாயால கெடுவார் எண்டது உண்மையாப் போச்சுது. போன் கோல் ரெக்கோர்ட் பண்ணியே கனபேரின்ர வண்டவாளத்தை வெளியில கொண்டந்த அர்ச்சுனா, கடைசியில அதே கோல் ரெக்கோடிங்கிலையே மாட்டுப்பட்டதுதான் பரிதாபம்.**

**இவ்வளவுநாளும் 'மாபியா, சிந்துஜா, ஊழல், மோசடி, சிஸ்டம்' எண்டு ஒரு மீட்பர் மாதிரி கதைச்சவரின்ர உண்மை முகத்தை ஒரேயொரு ரெலிபோன் கோல் காட்டிக்குடுத்துட்டுது.**

**ஜே.வி.பி.யில சேர்ந்து இயங்கிற ஒரு பொம்பிளை டாக்குத்தர் மூலமா அநுரகுமார திஸநாயக்கவோட அர்ச்சுனா போட்ட டீலின்ர ஓடியோ ரெக்கோடிங்க் தான் நேற்று 'லீக்' ஆகியிருக்கு.**

**நான் அநுரவுக்கு சப்போர்ட் பண்ணினால் தமிழ்ச் சனத்தின்ர வாக்குகளை லட்சக்கணக்கில எடுத்துக் குடுப்பன். என்னை பேஸ்புக்கில மட்டும் 95 ஆயிரம் பேருக்கு மேல 'ஃபலோ' பண்ணுகினம். பகிடி என்னெண்டால் அமைச்சர் டக்ளஸுக்கு கூட 10 ஆயிரத்துக்கும் குறைவான ஆக்கள் தான் 'ஃபலோ' பண்ணுகினம். அப்பிடியெண்டால் என்ர பவர் என்னெண்டு விளங்கியிருக்கும்.**

**நான் என்ன சொன்னாலும் வெளிநாட்டில இருக்கிற தமிழ் ஆக்கள் அப்படியே கேப்பினம். நான் ஆருக்கு வோட் பண்ணச் சொல்லுறனோ அவைக்குத்தான் வோட் பண்ணுகினம். அப்பிடி நான் அநுரவுக்கு சப்போர்ட் பண்ணுறதெண்டால் அம்பது கோடி ரூபா தரோணும்.**

**இதுதான் அந்த ரெக்கோடிங். ஆனால் இது பிளான் பண்ணி தன்ர பேரைக் கெடுக்கிறதுக்காக வெட்டி, ஒட்டி எடிட் பண்ணி போட்டிருக்கினம் எண்டு அர்ச்சுனா பேஸ்புக்கில ஒப்பாரி வைக்கிறார். ஆனால் அவர் சொன்னதை வேற ஆரோ வெட்டி, ஒட்டி பிழையா மாத்தி இருக்கினம் எண்டால், அர்ச்சுனா தன்னட்ட இருக்கிற ஒரிஜினல் ரெக்கோடிங்கை நேற்றே பேஸ்புக்கில விட்டிருப்பார். அதுதான் அவரின்ர ஸ்ரைல். ஆனால் அவர் இன்னமும் ஒரிஜினல் ரெக்கோடிங்கை விடேலை. அப்ப அவரில ஏதோ கள்ளம் இருக்கெண்டுதானே பொருள்? ரெக்கோடிங்குக்கே ரெக்கோடிங்க் இருக்கெண்டதை டாக்குத்தர் புரிஞ்சு கொண்டால் சரி.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குடும்பக் குற்றவாளிகளின் பெருக்கம் ஏன்?

உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும் என்று சுவாமி சிவானந்தர் சொன்ன வார்த்தைகளை எம்மில் எவருமே கடைப்பிடிப்பதில்லை.மாறாக மற்றவர்களின் குற்றம்,குறைகளை வெளிப்படுத்துவதிலும், அதனூடாக நம்மை உத்தமர்களாகக் கட்டமைப்பதிலுமே அதிக ஈடுபாடு காட்டுகின்றோம். அடுத்தவர்களைக் குற்றவாளிகள், கொடூரர்கள், மோசடியாளர்கள், துரோகிகள் என்று முத்திரை குத்துவதில் காட்டும் அக்கறையை நம்மைச் சுற்றி படரவிடுவதில் காட்டினாலேயே பெரும் சீர்கேடுகளையும், முறைகேடுகளையும் தவிர்க்கலாம். ஏனெனில் இப்போதெல்லாம் சமூகத்தை, குடும்பங்களை சீரழிப்பவர்களில் முன்னணியில் இருப்பது அதே சமூகத்தை / குடும்பத்தைச் சேர்ந்தோராக இருப்பதாக அண்மைக்கால குற்றவியல் பதிவுகள் சொல்கின்றன.

மனவளர்ச்சி குன்றிய பெண்ணை சிறிய தந்தை தன் சகாக்களோடு கூட்டு வன்புணர்வு புரிந்தமை, பெற்ற மகளை செல்போனில் தாயாரே ஆபாசமாக வீடியோ பதிவு செய்தமை, மனைவியே தன் கணவனை கொன்றமை, பெற்ற தந்தையே தன் மகளை பாலியல் தொழிலில் ஈடுபட பலவந்தப்படுத்தல், அண்ணனே தங்கையைச்சீரழித்தல், ஒன்றரை மாதச்சிசுவைக் கொன்ற தாய் என அண்மைக் காலக் குற்றச்செய்திகள் ஒரு பயங்கரச் செய்தியைச் சொல்லி நிற்கின்றன. குடும்பக் குற்றவாளிகளின் பெருக்கம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி. குற்றவாளிகள் வெளியில் இருந்தால், குடும்பத்தார் எச்சரிக்கையோடும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளோடும் செயற்பட்டால் அவர்களிடத்தில் இருந்து தப்பிக்கொள்ள முடியும். ஆனால் குடும்பங்களுக்குள் குற்ற மனத்தோடு இருப்பவர்களை இனம் காண்பதோ, அவர்களிடம் இருந்து தப்புவதோ இயலாத காரியம். எனவே வெளியகக் குற்றவாளிகளைவிடவும் இந்தக் குடும்பக் குற்றவாளிகள் விடயத்தை இன்னும் பெருக விடுவது நம் சமூக இருப்புக்கே ஆபத்தானது.

இந்தக் குடும்பக் குற்றவாளிகள் உருவாகுவதற்கு மிக முக்கியமான காரணி, நமது பாரம்பரிய வாழ்வியல் முறைகளை நாம் தொலைத்தமைதான். அன்பையும், பாசத்தையும், நற்பண்புகளையும் அடிப்படையாகக் கொண்ட நம் வாழ்வியல் இப்போது வேறு திசையில் பயணிக்கத் தொடங்கியதன் விளைவே இந்தக் குடும்பக் குற்றவாளிகளின் பெருக்கம். எனவே நாம் இழந்துபோன கூட்டுக்குடும்பம் உள்ளிட்ட நம் மரபார்ந்த வாழ்வியல் கூறுகளை மீளக் கைக்கொள்வதன் மூலமே இந்தக் குடும்பக் குற்றவாளிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.



## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை உன்னிப்பாக அவதானிக்கும் அமெ.

கொழும்பு, ஓக்.19

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை முன்னேற்றங்கள் கண்காணிக்கப்படுகின்றது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

மேலாண்மை மற்றும் வளங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் துணைச் செயலாளர் ரிச்சர்ட் ஆர் வெர்மா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அமெரிக்காவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ள அவர், வலுவான விசாரணை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் சிவில் சமூகத்தின் பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்றது முதல் இலங்கை அதிகாரிகளுக்கு உறுதுணையாக சட்டவிசாரணை ஆதரவை அமெரிக்கா வழங்கிவருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் பொறுப்புக் கூறும் இலங்கை அமெரிக்கா பகிர்ந்து கொள்கின்றது. விசாரணைகள் தொடரும் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் இணைந்த செயற்பாடுகளில் உறுதியாக உள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## சட்டவிரோத வாகனங்களை ஒப்படைத்த உரிமையாளர்கள்

கொழும்பு , ஓக. 19

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு சொகுசு வாகனங்கள் கடந்த புதன்கிழமை இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவின் உரிமையாளர்களால் கையளிக்கப்பட்டுள்ளன. கொழும்பு பிரதம நீதிவான் திலீனா கமகேயின் உத்தரவுக்கமையவே இந்த இரண்டு சொகுசு வாகனங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 400 மில்லியன் பெறுமதியான 7 வாகனங்களை அரசுடமையாக்குமாறு இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணை பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 112 சொகுசு வாகனங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கத்துக்கு 7 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-22,6)

## இலங்கை வருகின்றார் அமெரிக்க உயர் அதிகாரி

கொழும்பு, ஓக.19

பெருங்கடல்கள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் தற்காலிக உதவிச் செயலாளர் ஜெனிபர்.ஆர்.லிட்டில்ஜோன் இலங்கை வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது பயணத்தின் போது, இயற்கை மற்றும் கடற்பாதுகாப்பு, பிளாஸ்ரிக் மற்றும் காற்று மாசுபாடு, காலநிலை நெருக்கடி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அவர் விவாதிப்பார் என்றும், இன்றுமுதல் எதிர்வரும் 21ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், அரசாங்க உயர் அதிகாரிகளைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## கிராம அலுவலர்களின் போராட்டம் நிறுத்தம்!

கிராம அலுவலர்கள் முன்னெடுத்த சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரையில் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கிராம அலுவலர்கள் சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

**நாளை**

**20.08.2024**

செவ்வாய்க்கிழமை - ஆவணி - 04

சுபநேரம் 10.35 - 12.05

ராகுகாலம் 03

**நாளொரு நல்வார்த்தை**

தோல்வி என்பது வெற்றிக்கு எதிரானதல்ல அதுவும் வெற்றியின் ஒரு பகுதியே!

- அரியானா ஹபிங்டன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுக்கு பொலிஸார் உடந்தை

## முக்கொம்பன் மக்கள் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, ஓக.19**

**சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்து பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள் குற்றவாளிகளுக்கு பரிமாற்றப்படுவதாக முக்கொம்பன் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

பூநகரி பொலிஸாரால் சின்னப்பல்லவராயன்கட்டு பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட மக்களுடனான சந்திப்பின்போதே பொலிஸ் உயரதிகாரிகளிடம் மக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

முக்கொம்பன் கிராமத்தில் காவல் பிரிவொன்றை அமைத்து, சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

முக்கொம்பனிலிருந்து சட்டவிரோதமாக மணல், மரங்கள் கொண்டு செல்லப்படுவதுடன் பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள் குற்றம் இழைப்பவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய செயற்பாடுகள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுடன் பொலிஸார் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றார்கள் என்பதையே வெளிப்படுத்துகிறது என்றும் மக்கள் குறிப்பிட்டனர். (ச-25, 13)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 19

'தேர்தல்களும் தேர்வுகளும் தீர்வின்றித் தொடரும் மக்கள் பிரச்சினைகளும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலின் தொடக்கவுரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் , கருத்துரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## யாழ். வருகிறார் திராவிடர் கழக தலைவர் வீரமணி

யாழ்ப்பாணம், ஓக. 19

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97 ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை, எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் யாழ்.நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். சிறப்புரையை தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் ஆற்றுவார். (ச-66)



## கல்விச் சுற்றுலா

மாத்தளை – நாவுல நாமகள் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உதயன் பணிமனைக்கு கல்விச் சுற்றுலாவுக்கு வருகை தந்து, பத்திரிகையின் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொண்டனர். (ச)

## வயலின் இசையும் இன்னிசை அரங்கும்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 8 ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு, இளங்கலைஞர் மன்றத்தின் எற்பாட்டில் யோ.பானுஜா, சோ.திலக்சன், ப.கவிப்பிரியன், திருமகள் குழுவினரின் வயலினிசையும், என்.ஞானச்செல்வம் குழுவினரின் இன்னிசை அரங்கும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ஒ-25, 66)



## அரை மரதன் ஓட்டப்போட்டி!



முல்லைத்தீவில் அனைத்து வயதுப் பிரிவு இருபாலாருக்குமான மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் குமுழமுனையைச் சேர்ந்த முன்னாள் தேசிய மரதனோட்ட வீரனும், கனடாவில் வசிப்பவருமான கந்தசாமி பத்மநாதனின் நிதியனுசரணையுடன் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

இந்தப்போட்டியில் ஆண்களுக்கான மரதனோட்டம் 24 கிலோ மீற்றர் கொண்டதாக அமைந்ததுடன் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் முன்பாக ஆரம்பமாகி குமுழமுனை மகாவித்தியாலயத்தில் நிறைவடைந்துள்ளதுடன், பெண்களுக்கான மரதனோட்டம் 16 கிலோ மீற்றர் கொண்டதாக அமைந்ததுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகி குமுழமுனை மகா வித்தியாலயத்தில் நிறைவடைந்தது. இப் போட்டியை மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தை ஜெ.விதுசன், 2ஆம் இடத்தை ஜெ.அன்பரசன் மற்றும் யு.சுபராற் போன்ற வீரர்களும், பெண்கள்பிரிவில் முதலிடத்தை என்.கேமா, 2ஆம் இடத்தை எ.அனித்தா, 3ஆம் இடத்தை எஸ்.விதுஷா போன்ற வீராங்கனைகளும் பெற்றுக்கொண்டனர். (ஒ-13)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் 14 ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் 'நாலாயிரம் கண் படைத்திடலனே' எனும் தலைப்பில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் கடந்த சனிக்கிழமை சொற்பொழிவாற்றினார். (ஒ-25, 66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாட்டுக்காவல் சென்றவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஓக.19

மாட்டுக்காவலுக்காகச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் நேற்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலுள்ள மன்னாங்கண்டல் பிரதேசத்தில் நடந்துள்ளது.

கந்தையா மோகனதாஸ் (வயது -28) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் நேற்றுமுன்தினம் இரவு மாட்டுக்காவலுக்காகச் சென்றிருந்தநிலையில், நேற்றுக் காலை உயிரிழந்து காணப்பட்டுள்ளார். அவரது உடல் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-19-113)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றும். மனம் குழப்பம் அடையும். நன்மை காணும் நாள். வியாபாரத்தில் கவனமாகச் செயற்பட்டு இலாபம் அடைவீர். முயற்சி இலாபம் தரும்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** உங்கள் நிலை உயரும் நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வரும். முயற்சி வெற்றி அடையும். நினைப்பது நிறைவேறும். முன்னேற்றமானநாள். மனதில் இருந்த குழப்பம் விலகும்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

# சிறைச்சாலைக் கைதி சுகவீனத்தால் மரணம்

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - 12 இல் வசிக்கும் 44 வயதுடைய நபர் ஒருவர் நீதிமன்ற உத்தரவில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அவர் திடீர் சுகவீனம் காரணமாக மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது உயிரிழந்துள்ளார். (எ-20)

# வீட்டுக்குள் வாள் இளைஞர் மறியலில்

சுழிபுரத்தில் வாளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பெரியபுலோ பகுதியில் உள்ள வீடொன்றில் வாள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சோதனையை மேற்கொண்டனர். வீட்டில் இருந்து வாள் ஒன்று கைப்பற்றப்பட்ட நிலையில், அந்த வீட்டிலிருந்த 33 வயதான இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (எ-125)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக.19

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மின்கம்பத்துடன் மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல், யாழ்ப்பாணம் - கச்சேரிப் பகுதியில் நடந்துள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டுள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த இரு இளைஞர்களும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-100)

# மாலையில் மழை

கொழும்பு, ஓக.19

மாலை அல்லது இரவுவேளையில் நாட்டின் பல பகுதிகளில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் இடைக்கிடையில் 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

# 8 வயதுச் சிறுவன் விபத்தில் மரணம்

மட்டக்களப்பு, ஓக.19

வாகரை பிரதான வீதியிலுள்ள பனிச்சங்கேணி பாலத்தில் வீதியைக் கடந்த 8 வயதுச் சிறுவன் மீது வாகனம் மோதியதில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சிறுவனின் தாய், தந்தையர் முச்சக்கரவண்டியில் நேற்று இரவு பயணித்துக்கொண்டிருந்தபோது பனிச்சங்கேணி பாலத்தில் முச்சக்கரவண்டியின் முன்பக்க மின்விளக்கு திடீரென செயலிழந்துள்ளது.

பாலத்தில் முச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு அதைச் சிறுவனின் தந்தை சரி செய்துகொண்டிருந்தபோது, சிறுவனின் தாய் முச்சக்கரவண்டியில் இருந்து இறங்கி பாலத்தின் எதிர்ப்பக்கமாகச் சென்றுள்ளார். இதையடுத்து சிறுவனும் வீதியைக் கடக்க முயன்றபோதே வாகனம் மோதியுள்ளது. விபத்தை அடுத்து வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாகரைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# ஓ.எம்.பி. அலுவலகம் வாக்குமூலம் பதிவு

யாழ்ப்பாணம், ஓக.19

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் வாக்குமூலம் பதிவு செய்தது.

யாழ்ப்பாணம், சங்கானை, காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்களை உள்ளடக்கியே காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் விசாரணைகளை முன்னெடுத்தது.

இந்தநடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்ற நிலையில், நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் முடிவுற்றது. (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் நெஞ்சுவலி இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 19

வேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நீர்வேலி மேற்கைச் சேர்ந்த தவராஜா ராகுமாதவா (வயது -32) என்ற இளைஞராவார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டிலிருந்து வேலைக்குச் சென்றதாகவும் முற்பகல் 11 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டதாக தெரிவித்து கோப்பாய் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(அ-ஒ-27-100)



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள் வாக்கு**
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**திருமதி வே. மோகனதாஸ்**
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 071 241 1234, 021 221 1239

மறுவன்புலோ மேற்கு (தோப்புப் பிள்ளையார்)
சிதம்பர சித்தி விநாயகர்
ஆலய வருடாந்த அலங்கார உற்சவ விசேட கூட்டம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 27.08.2024 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் குறித்த திருவிழா ஒழுங்கமைப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கான விசேட கூட்டம் **எதிர்வரும்** 22.08.2024 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கூட்டத்திற்கு தங்களின் மேலான பிரதிநிதித்துவமும் ஆலோசனைகளும் எமக்கு தேவைப்படுவதால் குறித்த கூட்டத்திற்கு தங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(cs.55955) (N-1) செயலாளர்

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
O/L, A/L, B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கணம்,
கடந்தகால வினா விடை Spoken வகுப்புகள்
By. விக்னேஸ்வரன் ஆச்சார்யார்,
குபேரன் கட்டட மாடி , சங்கானை,
Tel: 077 675 1649

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
PPT நிறுவனத்திற்கு
* கணக்காளர்
* எழுதுவினைஞர்
* BUS நடத்துனர் (கோலையா)
077 386 6250, 076 440 8947

# நல்லூரானிடம் ஆசிவாங்கிய தமிழ்ப் பொதுவேட்பாளர்

## தந்தை செல்வா தூபியிலும் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஓக. 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் நல்லூர் ஆலயத்துக்கு நேற்றுக் காலை சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

தந்தை செல்வா நினைவு சதுக்கத்துக்குச் சென்ற பொது வேட்பாளர் உள்ளிட்ட குழுவினர் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன், நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்தும் ஆசி பெற்றனர். தொடர்ந்து ஏனைய மதத்தலங்களுக்குச் சென்று வழிபட்டதுடன், ஏனைய மத தலைவர்களிடமும் ஆசி பெற்றனர். இதன் பின்னர் முல்லைத்தீவில் நேற்று மாலை நடைபெற்ற முதல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

(அ-ஒ-20-100)

# ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 19

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாக் காலத்தில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆன்மீக அருளுரை வழமை போன்று இவ் வருடமும் நல்லூரிலுள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் இடம்பெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் 'மஹோற்சவமும் காலப் பூசைகளும்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார்.

(ஒ-66)

## மரண அறிவித்தல்



### கௌரிப்பிள்ளை மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கௌரிப்பிள்ளை மார்க்கண்டு 17.08.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெரியதம்பி மார்க்கண்டு (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கோகுலசிறி (ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர்), கோகுலவேணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சாந்தரூபன் (கனடா), குகரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசுந்தரம் (ஓய்வு நிலை RDO), தர்மராசா (ஓய்வு நிலை ADE), தேவலக்சுமி (கனடா), இசைச்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அருண், ஆரணி, ஆதீபன், சாம்பவி, துவேதன், சாருதன், சாருஜா, விஷ்ணு, விசாலி, கோபிதன், வேரகன், வைஷ்ணவி, துளசிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிளிர்னாவின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் பேரம்பலம், பொன்னம்பலம், யோகம்மா, சுப்பிரமணியம், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தங்கம்மா, கற்பகம், காசிப்பிள்ளை மற்றும் சதாசிவம் (ஓய்வுநிலை வரிமதிப்பீட்டாளர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/42938) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1936



மறைவு 15 . 08 . 2024

### வள்ளியம்மை சோமசுந்தரம்

பங்களா வீதி, மீசாலையைச் சேர்ந்த வள்ளியம்மை சோமசுந்தரம் அவர்கள் கடந்த 15.08.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம்மா தம்பதியின் மகளும், தம்பு - பாருப்பிள்ளை தம்பதியின் மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சுவர்ணா (இலங்கை), கிருஸ்யந்தன் (லண்டன்), விவேகானந்தன் (கனடா) , சிவநேசன் (மேலதிக பணிப்பாளர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிளிநொச்சி, இலங்கை), சுகல்யா (இலங்கை), சுகுணா (கனடா), சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிக்குமார் (இலங்கை), கெங்காதேவி (லண்டன் ) , வளர்மதி (கனடா), வனிதா (இலங்கை), யசோதரன் (KSY - இலங்கை), காலஞ்சென்ற அருள் (கனடா), மற்றும் இராஜேந்திரன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோன், மயூரி, நிசாந்தன், கிருஷாணி, கிருஜா, அர்ச்சனா, ஆராதனா, யதுசன், பிரணவி, இராகவி, ஸ்ரீகவி , அர்ச்சுன் , அஸ்மிதா, ரிசிகா, அருண், சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆர்யாவின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2024) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு :

| | | |
|---|---|---|
| சுவர்ணா | (இலங்கை) | - 0212270639, 0772937200 |
| சிவநேசன் | (இலங்கை ) | - 0772357915 |
| விவேகானந்தன் | ( கனடா) | - 001647-533-9568 |
| யசோதரன் | (KSY - இலங்கை) | - 0775474188 |
| இராஜேந்திரன் | (கனடா) | - 01647-608-7990. |
| கிருஷ்யந்தன் | (லண்டன் ) | - 044-208422-8002 |

தகவல்:
குடும்பத்தினர்

(CS/42938) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வவு. சைவப்பிரகாசம் சாதனை!

யாழ்ப்பாணம், ஓக.19

உடுவில் மகளிர் கல்லூரியின் 200வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் 20 மற்றும் 18 வயதுப் பிரிவுகளில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் பாடசாலை அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் உடுவில் மகளிர் கல்லூரியின் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 20 வயதின் கீழ்ப் பிரிவில் வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி முதலிடத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி 2ஆம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

18வயதுப் பிரிவின் கீழ் நடைபெற்ற போட்டிகளில் வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி முதலிடத்தையும், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் 2ஆம் இடத்தையும், அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

நிகழ்வின் விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செந்தில் குமரன், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆன்மீக குரு ரெப. லிங்கேசன், உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டுச் செயலாளர் ப.தர்மகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஏ-ரி-27)



## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.19

சாவகச்சேரி பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு, சபையின் செயலாளர் தலைமையில் நாவற்குழி நெய்தல் கடற்கரை மற்றும் நாவற்குழி உப அலுவலகத்திலும் அண்மையில் இடம்பெற்றன.

நடைபெற்ற போட்டிகளில் கயிறுஇழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் வல்வெட்டித்துறை நகரசபையும், பெண்கள் பிரிவில் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன. கிளித்தட்டுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாநகரசபையும், பெண்கள் பிரிவில் வல்வெட்டித்துறை நகரசபையும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன.

சதுரங்கப்போட்டியில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி நகராட்சி மன்றமும், ஆண்கள் பிரிவில் வேலணை பிரதேசசபையும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன. (ஏ-45-159)

## கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா


யாழ்ப்பாணம், ஓக. 19

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கலைமகள் கலையரங்கு முன்றலில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் இடம்பெற்றது.

விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்களின் விநோத உடைப்போட்டியும் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நோபேட் உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். விருந்தினர்களாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சரவணபவன் கஜேந்திரன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றியச் செயலாளரும், முன்பள்ளியின் பழைய மாணவனுமான சித்திரசேனன் ராகவன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இராசரத்தினம் தயாபரன், ஊடகவியலாளர் இராசரத்தினம் தர்ஷன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், சுழிபுரம் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஏ-ரி-125)





கிளிநொச்சி தருமபுரம் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்றது. (ஏ-45)

மானிப்பாய் பாரிஷ் லயன்ஸ் கழகத்தால் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வு லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சுப்பிரமணியம் துரைரத்தினம் தலைமையில் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கருத்தரங்கில் மாணவர்கள் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஏ-45-125)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாமனிதர் சிவமகாராசாவின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 19
சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அமரர் மாமனிதர் சி.சிவமகாராசாவின் 18ஆவது ஆண்டு நினைவு தினமும் பணியாளர் ஒன்றுகூடலும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் திருமதி சு.கௌரிதேவி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தனுஷன் சிறப்பு விருந்தினராகவும், தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.திருநாவுக்கரசு, அமரர் சி.சிவமகாராசா அறநிதியச் சபையின் தலைவர் ந.உமாகரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-ஒ-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 03 . 1942



மறைவு 16 . 08 . 2024

### திருமதி மாணிக்கம் சீதாலட்சுமி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சீதாலட்சுமி (16.08.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காளமேகம் தர்மாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கரத்தினம். விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும். வனிதா. சுமதி. சித்திரா. கேதீஸ்வரன். தெய்வலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும் இராமநாதன் சுகந்தி அவர்களின் பெரியதாயாரும் தில்லைநாதன். மகீவரன். செல்வரட்ணம். மலர்விழி. தேவகுமார் அவர்களின் பாசமிகு மாமியும் ரம்மியராகுலன் ஶ்ரீசக்தி. ஶ்ரீதரன் துவாரகா. பிறேம்நாத் சுவேதிகா. டக்ஷன் வினுஷ்டிகா. கெவின்போல் கீர்த்திகா. சிவராஜ். துளசிகா கிருஷிகன். சங்கவி. சிவறஞ்சினி. மயூரன். ரிசாலினி. லோகோஜித். ஷாகோஜித். கர்னிகா. அபிஷேக். அதனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பௌஷிகா. ரெஷிகா. கோபினா. ருத்விக். ருத்வின். கிருத்திக். லிதுன். தனுஶ்ரீ அபிரா டெய்ஷி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (19.08.2024) அவரது இல்லத்தில் இடம்பெற்று மதியம் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 424 4365
074 354 7144
076 170 4550

(CS 1171) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1953



மறைவு 18 . 08 . 2024

### மரியநாயகம் எல்சின் நிர்மலா

நாரந்தனை ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் இலந்தையடி வீதி உடுவில் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் எல்சின் நிர்மலா (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க்ஸ்பார்-ஆரோக்கியம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தேவதாஸ் -மரியநாயகம் என்பவரின் அன்பு மனைவியும் யேன் ஒஸ்ரினி (ஜேர்மனி). ஜோன்சக்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சண்டிலிப்பாய்). யோன்றைடின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில்). யோன்ஸ்ருவேர்ட் (சுவிஸ்). யேன்யாழினி (ஆசிரியர் ஏழாலை ஶ்ரீமுருகன் வித்தியாலம்). டேர்ன்வைரன் (முகாமைத்துவ உதவியாளர் புவிச்சர்தவியல் திணைக்களம்). ஜெயபிரதீப் (பொதுசுகாதார பரிசோதகர் சுதுமலை) ஆகியோரின் அன்புத்தாயாரும் பியூட் (ஜேர்மனி). அனஸ்ரிகா (ஆசிரியர் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை). றொசானி. சிந்துஜா (சுவிஸ்). கிருஸ்னகுமாரன் (வவுனியா வர்த்தகர்). திரிசினி. அஜந்தா (ஆசிரியர் வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (19.08.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 02.45 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 331 7215

(CS 1172) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1953



மறைவு 17 . 08 . 2024

### வினாசித்தம்பி றஞ்சினிதேவி (தேவி)

கரவெட்டியை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி றஞ்சினிதேவி (தேவி) 17.08.2024 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் வினாசித்தம்பி (ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரபாகு பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் மகேஸ்வரன் (அமரர்) . லோகேஸ்வரன் . அஞ்சலிதேவி (அமரர்). ரவிசந்திரிகா, விக்கினேஸ்வரி. விக்கினேஸ்வரன் (அமரர்),மாங்களம் (அமரர்) மற்றும் முகுந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்தில்லைநாதன் (அமரர்). செல்லம்மா, இரத்தினராசா, சிவராசா. வசந்தாதேவி மற்றும் திருநாவுக்கரசு (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் யசோதரா. கலைவாணி. வசீகரன். திவாகரன். ராஜன். அனுசியா மற்றும் நளாயினி ஆகியோரின் அன்பு தாயாரும் கதிர்காமபாலன். திருச்செல்வம். மயூரதி. கலைவாணி. சாந்தி. சிவகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவாந்தினி. கனோஜன். குலபாலினி. கீர்த்தனன். கார்த்திகன். கஜானன். காவியன். அட்சயா.தீபிகா. அபிசாந். அக்ஸரா. பிரதீஸ். பிரியன். பிரிசா. லாவன்யா. சௌமியா. துஸ்யந்தன். அஸ்வினி. துசாந். பிரித்திகா. தனுசிகா மற்றும் ஹரினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும்லட்சிகா. லதுசன். சேஸ்மிதன். விக்ருதி. அட்சரன் மற்றும் ஆதிரா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2024 செவ்வாய் கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42948) V-1

## 31ம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



உறவோடு : 23.02.1931 இறையோடு : 20.07.2024

யாழ். இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர். இராசாத்தி தம்பிஜயா

உலகியல் பயணத்தை நிறைவுசெய்து
இறையியல் பயணத்தை தொடர்ந்த
எம் இல்லத்தலைவியின் நினைவுச்சுவட்டில்...
திங்கள் ஒன்று கடந்தது..
எம் இல்லத்து ஒளிவிளக்காய்
வாழும் காலம் உங்கள்
இறை சிந்தனைகளும், அறிவுரைகளும்
வழி காட்டியது போல எம் எண்ணமெல்லாம்
நீவிர் நிறைந்து எம்மை நாம் செதுக்கிச் சீராக்க
சூட்சுமமாய் எமக்கு வழி காட்டும்
உங்கள் கரங்கள் பற்றி...
எம் வாழ்நாட்களை நகர்த்த விழைகிறோம்...
தங்கள் ஆன்மா இறைதிருவடியில் இளைப்பாற...
பிரார்த்திக்கிறோம்...

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும். தொலைபேசியூடாகவும். முகநூல்.மின்னஞ்சல். RIPBOOK ஆகியவை மூலமாகவும். எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

குடும்பத்தினர்.

(CS 1173) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின்...

பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து இணையவழி மூலம் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிய அறிக்கையில், வங்காள விரிகுடா மற்றும் அதைச் சூழ உள்ள பிராந்தியங்கள் தற்போது அபிவிருத்தி மையமாக மாறி வருவதால், பிம்ஸ்டெக் அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கையானது இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடனும், ஜப்பான் முதல் இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலகின் தெற்கு நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்கள் தொடர்பில் பொதுவான ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு 'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாடு உதவும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய - இலங்கை உறவு குறித்து இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 'நோக்கு' பிரகடனம் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ஒத்துழைப்பை நினைவுபடுத்துவதுடன் எதிர்காலத்தில் நெருக்கமான உறவுகளுக்கு வழி வகுக்கும் என்றும் இது இறுதியில் பல்வேறு துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான ஒருங்கிணைப்புக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையால் இலங்கை மக்கள் இரண்டு வருடங்களாக எதிர்கொண்ட சிரமங்களைக் குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீள முடிந்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அதற்காக நன்றிகளைத் கூறினார், என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## திடீர்...

நாகர்கோவில் பகுதியில் அவர் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை கரையிலிருந்து 24 கடல் மைல் தூரத்தில் 100 அடி ஆழத்தில் சிலிண்டரைப் பயன்படுத்தி அட்டை தொழிலில் ஈடுபட்டிருந்தார். இந்தநிலையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாகத் தெரிவித்து ஆழ்கடல் பகுதியில் இருந்து மேற்பகுதிக்கு வந்துள்ளார். இதனை அடுத்து அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்புத் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார்.

(அ-ஒ-27-100-159)

## யுவதி...

மேற்படி சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவாவால் நெல்லியடிப் பொலிஸாருக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் துன்னாலைப் பகுதியை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற ...தில் நீதிவான் முன்னிலையில் பொலி ...ர் முற்படுத்தியபோது விளக்கமறிய ... வைக்குமாறு உத்தரவிட்டார்.

(அ-ஒ-100)

## முச்சக்கரவண்டி...

...ந்த ஆனி மாதம் 22ஆம் திகதி ...ிவன் பண்ணை வீதியூடாக, திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வாங்குவதற்காக குறித்த முதியவர் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தார். இந்நிலையில் முதியவரின் எதிர்த்திசையில் வந்த முச்சக்கரவண்டி மோதியதில் அவர் அவ்விடத்திலேயே மயங்கி வீழ்ந்துள்ளார் .

உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் கடந்த மூன்றாம் திகதி வீடு திரும்பியிருந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். தலையில் அடிபட்டதாலேயே உயிரிழப்பு சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளில் தெரியவந்துள்ளது.

(அ-ஒ-27)

## குரங்கம்மை...

குரங்கம்மைத் தொற்றாளர்கள் இனம் காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் குரங்கம்மைத் தடுப்புப் பிரிவு மருத்துவர் எஸ்.பெரேரா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு உல்லாசப்பயணிகளுக்கு விமான நிலையத்தில் வைத்து குரங்கம்மைப் பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ளதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-6)

## பக்த...

ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7 மணியளவில் சிறப்பு அபிஷேகம் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வேற் பெருமான், விநாயகப் பெருமான், வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் உள்வீதி உலா வந்து முத் தேர்களில் ஆரோகணித்தனர். சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க முற்பகல்10 மணியளவில் முத்தேர்களின் பவனி ஆரம்பமானது.

முத்தேர் பவனி இடம்பெற்ற போது நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணை செய்தும், பல பெண் அடியவர்கள் அடியழித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றியதுடன் நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்தும் பறவைக்காவடிகள், தூக்குக் காவடிகள், செதில் காவடிகள் உள்ளிட்ட காவடிகள் எடுத்தும், பெண் அடியவர்கள் பலரும் பாற்காவடிகள் எடுத்தும் ஆலயம் நோக்கி வருகை தந்து நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றினர். மேற்படி ஆலயத் தேர்த் திருவிழாவில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டனர்.

(அ-ஒ-66)

## இ.தொ.காங்கிரஸ்...

தமது ஆதரவு தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கொட்டகலை சீ.எல்.எப். கேட்போர் கூடத்தில் நேற்றுக் கூடியது.

இதன்போது, ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. தேசிய சபை உறுப்பினர்களின் கருத்துகள் உள்வாங்கப்பட்டதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இ.தொ.கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன் ஆகியோர் இணைந்து ரணிலை ஆதரிக்கும் முடிவை அறிவித்தனர்.

(அ-ஒ-44)

## தமிழரசுக்கட்சி...

வவுனியாவில் நேற்று அக்கட்சி தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் இடம்பெற்ற மத்தியக்குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, தென்னிலங்கையின் பிரதான கட்சிகளோடு நடைபெறும் பேச்சுகளின் விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றைய கூட்டத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், தொடர்ந்து பேச்சுகளை முன்னெடுக்கும்படியும், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களின் கருத்து நிலைகளை அறிந்து, அவர்களின் தேர்தல் அறிக்கைகள் வெளியான பின்னர் மத்திய குழு மீண்டும் கூடி அவற்றை ஆராய்ந்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவது தொடர்பிலும், தேர்தல் விஞ்ஞாபனங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர் அவற்றையும் பரிசீலித்து ஒரு தீர்மானத்தை எடுப்பது குறித்தும், மத்திய குழுவில் யோசனை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பிரேரிக்க அதனை மத்திய குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. கூட்டத்தின் ஆரம்பத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு சற்று நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூட்டத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மேலும், தென்னிலங்கை பிரதான வேட்பாளர்களோடு தொடர்ந்து பேசுவதற்குக் கட்சி தீர்மானித்திருப்பதையும் பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியான பின்னர் அவை யாவற்றையும் பரிசீலித்து ஒரு முடிவை எடுக்கும் தீர்மானத்தில் கட்சி இருப்பது குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பொறுப்புடனும் நிதானத்துடனும் செயற்படுமாறு கட்சியின் பிரமுகர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் மத்திய குழு அறிவுறுத்தல் வழங்கும் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## 'வற்'...

திஸாநாயக்க தெரிவித்தார்.

“குறுகிய காலத்தில் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைப்போம், உணவு, சுகாதாரம் மற்றும் பாடசாலைப் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரியை நீக்குவோம்” - என்றார்.

மேலும் ஏனைய வேட்பாளர்கள் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதை விட அவர்களின் தனிப்பட்ட நலன்களில் கவனம் செலுத்துவதாகவும் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

(அ-ஒ-44)

## தாய்ப்பால்...

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பணிப்பின் பிரகாரம் தென்மராட்சி - கொடிகாமம் பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இறப்பு விசாரணையை மேற்கொண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ-ஒ-159)

## அலங்காரக்...

நேற்று இடம்பெற்ற மஞ்சத் திருவிழாவில் ஏராளமான அடியார்கள் கலந்து கொண்டு நல்லூர்க் கந்தனின் அருளைப் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-100)

## சந்நிதியில்...

வரையான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்படுகின்றது.

சனநெரிசலைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

(அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரப்புரையில் தேசியக் கொடி; இனிமேல் கடும் நடவடிக்கை!

தேர்தல் பரப்புரைகளுக்கு தேசிய கொடியை பயன்படுத்தினால் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், இது தொடருமானால் இன்னும் சில நாட்களில் தேசிய கீதம் கட்சியின் பாடலாக மாறும் எனவும் தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பவ்ரல் அமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியல்வாதிகளை பார்க்கிறோம், அவர்கள் இல்லாமல் தேர்தல் இல்லை. தேசியக் கொடியின் பெருமை இன்று பள்ளத்துக்கு போய் விட்டது. எனவே, தேர்தல் பரப்புரைகளுக்கு தேசியக் கொடியை பயன்படுத்த வேண்டாம். இப்போது கிரிக்கெட் போட்டிகளில், தேசியக் கொடியை சுற்றிக் கொண்டு, ஒரு கையில் மது போத்தலை வைத்துக் கொண்டு நடனமாடுவது அரசியல் தத்துவம் இல்லை. நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை" – என்றார். (அ–ஒ–6)

**பணிநிலை வெற்றிடம் செல்வா எலக்ரிக்கல்ஸ்-திருநெல்வேலி**

01. விற்பனையாளர் (ஆண்கள்)
மின்சார பொருட்கள் தொடர்பான அறிவு மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்

02. கணக்குப் பதிவாளர்/ கணக்காளர் (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
க.பொ.த. உயர்தர வர்த்தகப்பிரிவு. கணனி தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.
முன் அனுபவம் மேலதிகத் தகைமையாக கொள்ளப்படும்.
19.08.2024 - 21.08.2024 காலை 10.00-12.00 மணி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல. 21, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு:
077 160 2771

## திறப்பு விழா அழைப்பிதழ்




19.08.2024 இன்று மங்களகரமான நாளில்
எம்மால் ஒழுங்கமைக்கப்பட்ட

**"ருசி சைவ உணவகம்"**

மருதனார் மடம் சந்தியில் (வைரவர் கோவில் முன்பாக)
திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28.11.1948 | 18.08.2024 |

காரைநகர் புதுறோட்டு மல்லிகையை பிறப்பிடமாகவும்,
நீர்கொழும்பு கொச்சிக்கடையை வாழ்விடமாகவும்
கொண்டு இருந்த


**அமரர்**
**நவரத்தினம் தர்மராசா (MGR)**
(தலைவர்,காரை விளையாட்டுக் கழகம்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஈழத்துச் சிதம்பரம்
ஆண்டிகேணி ஐயனாரை
பிரார்த்திக்கின்றோம்.

**காரை விளையாட்டுக் கழகம்**
**காரைநகர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 04 . 1948 | 17 . 08 . 2024 |



### குமாரசாமி செல்லையாபிள்ளை

பொலிகண்டி - திக்கத்தை பிறப்பிடமாகவும். ஓமான். கனடாவை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்லையாபிள்ளை 17.08.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திக்கம் செல்லையாபிள்ளை தம்பதியரின் பேரனும். காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகபூசனி தம்பதியரின் புத்திரனும். காலஞ்சென்றவர்களான திருச்சிற்றம்பலம் - நகுலாம்பிகை தம்பதியரின் மருமகனும். தங்கராணியின் அன்புக் கணவரும். தக்ஷாயினி. கங்காசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். குலகன். தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும். சயூரி. சிவானி. லவின் ஆகியோரின் பேரனும். முகுந்தன். ஜெயமனோகரி ஆகி யோரின் அன்பு சகோதரனும் ஆவார்.


இறுதிக்கிரியைகள் 21-08-2024 புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

**குடும்பத்தினர்**
**கனடா** - +164 796 17131

(CS 55966) N-1)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 . 11 . 1948 | 18 . 08 . 2024 |



### நவரத்தினம் தர்மராசா (MGR)

கார்ரைநகர் புதுறோட் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு கொச்சிக்கடையை வாழ்விடமாகவும் கொண்ட நவரத்தினம் தர்மராசா (MGR) நேற்று (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (ஆசிரியர்) நவரத்தினம் - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் (மிருதங்க வித்துவான். வானிலை ஆராட்சி உத்தியோகத்தர்) - சவுந்தராம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும். சுந்தராம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், பிரணவராஜ் அவர்களின் பாசமிகு தந்தையும். தனுஷா அவர்களின் மாமனாரும். சரணின் தாத்தாவும். பாக்கியராஜா (ஆசிரியர் ஒய்வு நிலை). காலஞ்சென்றவர்களான ஸ்ரீகரலட்சுமி. சாரதா. லலிதா (அன்னம்) மற்றும் கோகனதை (சுவிஸ்). நிர்மலாதேவி (இலங்கை). அரிகரராசா (பாரிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்

55/2, மார்சலஸ் றோட்,
பள்ளன்சேனை,
கொச்சிக்கடை,
நீர்கொழும்பு.

(CS/1170) N-1

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 603 3259**
**077 933 7759**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org